2017 மார்ச் 23]

காசநோயினாலே அதிகமாக பாதிக்கப்பட்டு வருவதாலே அதைத் தடுப்பதற்குண்டான ஒரு நடவடிக்கையாக வேறு ஏதாவது ஒரு மருத்துவமனையையாவது அவர்களுக்கு தமிழக அரசின் சார்பாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்பதைத் தங்கள் வாயிலாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு ஏதாவது ஓர் அரசு மருத்துவமனை தேவையென்றால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் ஆலோசித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கோதண்டபாணி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

80—

பேருந்து வசதி

***6741—திரு. மு. கோதண்டபாணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை பிராட்வேயிலிருந்து மாமல்லபுரத்திற்கு கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பயணிகள் பிராட்வேயிலிருந்து மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மூலமாக அடையாறு வந்தடைந்தால் அங்கிருந்து மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் பேருந்துகளைப் பயன்படுத்தி மாமல்லபுரம் வந்தடையலாம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கோதண்டபாணி அவர்கள்.

திரு. மு. கோதண்டபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தினுடைய தலைசிறந்த முதல்வராகவும், அனைத்துத் தமிழர்களின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் நீக்கமற நிறைந்து, எங்களுடைய இதய தெய்வம் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 'அம்மா' என்கிற மூன்றெழுத்து சொல்லுக்கு இலக்கணத்தை வகுத்து, நீண்ட நல்லாட்சி செய்து, இன்னும் 100 ஆண்டுகளானாலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியை நடத்த அமர்ந்த இடத்தினையும், அவர்களுடைய ஆன்மாவையும் நன்றியோடு வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நல்லாட்சியின் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், எங்களின் கழகப் பொதுச் செயலாளர் மதிப்புமிகு சின்னம்மா அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகப் பாரம்பரிய கலாச்சாரச் சுற்றுலாத் தலமான மாமல்லபுரத்தை காண்பதற்கு உள்நாட்டினர் மற்றும் வெளிநாட்டினர் ஆண்டுதோறும் பல இலட்சக்கணக்கில் வருகை தருகின்றனர் என்பதைக் கனிவோடு நினைத்துத்தான் இந்தக் கேள்வியை நான் இந்த அவைமுன் வைத்திருக்கின்றேன். எனவே, சென்னை பிராட்வேயிலிருந்து சென்ட்ரல் இரயில் நிலையம் வழியாக மாமல்லபுரம் வரை கூடுதலாகப் பேருந்துகளை இயக்கினால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகளுக்கும், அன்றாடம் சென்னைக்கு வேலைக்காக வருவோர்களுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும் மற்றும் வியாபாரிகளுக்கும் பயனுள்ளதாக அமையும். எனவே, இதைக் கனிவோடு பரிசீலித்து, பேருந்துகளை இயக்க தங்கள் வாயிலாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

2017 மார்ச் 23]

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிராட்வேயிலிருந்து மாமல்லபுரத்திற்கு நேரடியாகப் பேருந்துகள் எதுவும் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படவில்லை. எனினும், பொது மக்கள் பிராட்வேயிலிருந்து இயக்கப்படுகிற வழித்தடங்கள் 102, 102C, 102K, 109, 85 ஆகிய பேருந்துகளைப் பயன்படுத்தி அடையாறு பணிமனை வந்தடைந்தால் அவ்வழியாகப் பயணிகளின் பயன்பாட்டிற்கேற்ப 568, 588, 599 என்ற 3 வழித்தடங்களில் 13 பேருந்துகள் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் மாமல்லபுரத்திற்கு இயக்கப்படுகின்றன. இதன்மூலம் மாமல்லபுரம் சென்றடையலாம். மேலும், தடம் எண் 109-ல் ஓடும் 26 பேருந்துகளைப் பயன்படுத்தி திருவான்மியூர் சென்று, திருவான்மியூர் வழியாக, மாமல்லபுரம் செல்லும் 6 புறநகர் பேருந்துகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கோதண்டபாணி அவர்கள்.*

திரு. மு. கோதண்டபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவதுபோல், சுற்றுலாப் பயணிகள் வெளிநாடுகளிலிருந்தும், வட மாநிலங்களிலிருந்தும் வருகை தருகின்ற காரணத்தால் இரண்டு பேருந்துகளில் மாறிச் செல்வது என்பது சாதகமான வழிவகையை ஏற்படுத்தாது. எனவே, நேரடியாக பிராட்வேயிலிருந்து, சென்ட்ரல் இரயில் நிலையம் வழியாக மாமல்லபுரத்திற்கு பேருந்துகளை இயக்கினால், மாமல்லபுரம் செல்லும் பயணிகளுக்கு ஏற்புடையதாக அமையும் என்பதைப் பணிவோடு தெரிவித்து அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.*

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட குன்றத்தூரிலிருந்து பிராட்வேக்கு கெருகம்பாக்கம், கொளப்பாக்கம், மணப்பாக்கம் வழியாக ஒரு பேருந்தும்; மதனந்தபுரம், முகலிவாக்கம், மணப்பாக்கம் வழியாக ஒரு பேருந்தும் எங்களுடைய ஒப்பற்றத் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் இயக்கப்பட்டன. அதற்குப் பிறகு 7 ஆண்டுகளாக எந்தப் பேருந்தும் அந்தப் பகுதிகளில் இயக்கப்படவில்லை. மக்கள் நெருக்கம் அதிகரித்துவிட்டதன் காரணமாகவும், சென்னை புறநகர்ப் பகுதி வளர்ந்துவிட்ட பகுதி என்பதாலும், இந்த அரசு ஆய்வு செய்து மேலும் கூடுதலான பேருந்துகளை அந்தப் பகுதிகளில் இயக்க வேண்டுமென்று தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வேண்டுகோள் வைக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய வழித்தடங்களில் ஆய்வு செய்து, தேவை ஏற்படுமாயின், கூடுதலான பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.*

திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதியில் அதிகமான வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று கடந்த 2006–2011 ஆம் ஆண்டிலிருந்து கோரி வந்தேன். அப்போது 50 சதவிகித பேருந்துகள் கிடைத்தன. தற்போதுள்ள இந்த ஆட்சியில், ஒரு பேருந்துகூட இயக்கப்படவில்லை. செண்பகராமநல்லூரர்,* route no. *141, தற்பொழுது அதே 141 என்ற எண் கொண்ட நகரப் பேருந்து நாங்குநேரியிலிருந்து மூலக்கரைப்பட்டிக்குச் சென்று வருகிறது. இந்த வழித்தடப் பேருந்தை நாங்குநேரியிலிருந்து நாச்சாங்குளம் வரை காலை 8–00 மணிக்கு இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலுள்ள முக்கிய விஷயம், அந்த ஊரில்*

2017 மார்ச் 23]

உள்ள மக்கள் இதுவரை பேருந்தைப் பார்க்கவே இல்லை என்பதை ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன். எனவே, மேலூர், கீழூர் ஆகிய இரண்டு ஊர்களையும் சேர்த்து, நாச்சாங்குளம் ஊருக்கு தயவுசெய்து பேருந்துகளை இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பத்மநாபபுரத்திலிருந்து, சிவந்திப்பட்டி ஊராட்சிக்குப் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்குள்ள மக்களும் சுதந்திரம் அடைந்தது முதல் இதுநாள் வரையிலும் பேருந்தைப் பார்க்கவே இல்லை. அந்த மக்களுக்கு பேருந்தைக் காட்டுங்கள் என்று கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலும் சொன்னேன். எனவே, தயவுசெய்து நீங்கள் அங்குள்ள மக்களுக்கு பேருந்தைக் காட்டுங்கள். தொகுதிக்குச் செல்வதற்கே எனக்கு மிகவும் சங்கடமாக உள்ளது. எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்களும் கொஞ்சம் நமது அமைச்சர் அவர்களிடம் சொல்லி, எனது தொகுதிக்கு அதிகமான பேருந்துகளை வாங்கிக் கொடுப்பீர்களென்றால், நான் தைரியமாக நாங்குநேரிக்குச் செல்லலாம். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்ற முறையும், மக்கள் பேருந்தைப் பார்க்கவே இல்லை என்று சொல்லியிருந்தார். அவர், என்னை நேரடியாகச் சந்தித்து, 40 வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று கோரி நீண்டதொரு பட்டியலைக் கொடுத்திருக்கிறார். அந்த வழித்தடங்களில் பேருந்துகள் இயக்குவது தொடர்பாக ஆய்வு செய்வதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் அதைக் கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, தேவைப்படும் இடங்களில் பேருந்துகளை இயக்க பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]